**செ. கு. எண்**: 312 **நாள்**: **30.08.2012**

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 30.8.2012

திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. சு. தங்க பாண்டி மற்றும் புளியங்குடி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. மாரியப்பன் ஆகிய இருவரும் 28.8.2012 அன்று இரு சக்கர வாகனத்தில் காவல் நிலையத்திற்கு சென்று கொண்டிருக்கும் போது, வீரவநல்லூர் கோமதி மில்ஸ் அருகே எதிரே வந்த வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. தங்க பாண்டி மற்றும் முதல் நிலைக் காவலர் திரு.மாரியப்பன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த சாலை விபத்தில் காலமான காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. தங்க பாண்டி மற்றும் முதல் நிலைக் காவலர் திரு.மாரியப்பன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**